வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 23.06.2026 செவ்வாய்கிழமை இதழ் : 168 பக்கங்கள் : 08




# பிராந்திய அமைதிக்காக இலங்கை தனது அதிகபட்ச ஆதரவை வழங்கும்!

## அமெ. உதவிச் செயலரிடம் ஜனாதிபதி அநுர



கொழும்பு, ஜூன். 23

பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்காக இலங்கை தனது அதிகபட்ச ஆதரவை வழங்கும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் கலாநிதி போல் கபூர், நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை சந்தித்தார்.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான 77 ஆண்டுகால இருதரப்பு உறவுகள் இதன்போது நினைவு கூரப்பட்டதுடன், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் வர்த்தகம், பாதுகாப்பு, முதலீடு, சுற்றுலா மற்றும் இருதரப்பு மக்கள் தொடர்புகள் போன்ற துறைகளின் ஊடாக சிறந்த பன்முக ஒத்துழைப்பாக வளர்ச்சியடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து 07

# சர்வதேச சட்டங்களுக்கு இணங்க நடுநிலையாக அரசு செயற்படும்!

## அமெ. உதவி இராஜாங்க செயலரிடம் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன். 23

இலங்கை எப்போதும் நடுநிலையாகவும், சர்வதேச சட்டங்களுக்கு அமைவாகவும் செயற்படும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் எஸ். போல் கபூருடன் அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின் போது, அமெரிக்கா இலங்கைக்கு வழங்கி வரும் தொடர்ச்சியான ஆதரவிற்காக அமைச்சர் தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

மத்திய கிழக்கில் நிலவிய யுத்த சூழ்நிலைக்கு மத்தியில், இலங்கைக்கு எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக வழங்கிய ஆதரவிற்கு அமைச்சர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கை கடற்படை மற்றும் விமானப்படைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட கடல்சார் ரோந்துப் படகுகள் மற்றும் விமானங்களுக்காகவும் அரசாங்கத்தின் நன்றியறிதலை 07

# ஜனாதிபதி செயலகம் முன்பாக மீனவர்கள் மீண்டும் போராட்டம்

கொழும்பு, ஜூன். 23

தமது தொழிலை முன்னெடுத்துச் செல்வதற்கான முறையான வேலைத்திட்டமோ அல்லது தீர்மானமோ இதுவரை அறிவிக்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, மீனவர்கள் குழுவொன்று ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக சத்யாகிரகப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

நேற்றும் இன்றும் அவர்கள் அதே இடத்தில் தங்கியிருக்க தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை மீனவர் சங்கத்தின் செயலாளர் ஆர். ஏ. டில்ருக் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். 07

# அமெ.-ஈரான் இடையிலான முதல் நாள் பேச்சு நிறைவு!

ஜெனீவா, ஜூன். 23

அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையிலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முதலாம் நாள் உயர்மட்ட இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகள் சுவிற்சர்லாந்தில் நிறைவடைந்துள்ளன.

பாகிஸ்தான் மற்றும் கட்டாரின் மத்தியஸ்தத்துவத்துடன் நடைபெற்ற இந்த சந்திப்பில், இரு நாடுகளுக்கும் இடையே கடும் வார்த்தைப்போர் நிலவியபோதிலும் முக்கிய பிராந்திய மற்றும் பொருளாதார விவகாரங்கள் குறித்து விரிவாக 07

# சீனத் தூதுவர்-ரில்வின் சில்வா கொழும்பில் முக்கிய சந்திப்பு!



கொழும்பு, ஜூன். 23

இலங்கைக்கான சீனத் தூதுவர் கி சென்ஹொங்-ஜே.வி.பி பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோருக்கு இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான சீன பிரதித் தூதுவர் யான்வெய் சு மற்றும் சீனத் தூதரகத்தின் அரசியல் ஆலோசகர் மெய் ஜிங் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி கொண்டாடப்படவிருக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 105ஆவது ஆண்டு நிறைவு விழா குறித்து சீனத் தூதுவர், ஜே.வி.பி பொதுச் செயலாளருக்கு விளக்கமளித்ததுடன், ஆண்டுவிழாவை முன்னிட்டு கொழும்பில் நடத்தப்படவுள்ள உத்தியோகபூர்வ விழாவில் கலந்துகொள்ளுமாறு ரில்வின் சில்வாவுக்கு அழைப்பு விடுத்தார்.

மேலும், சீனாவில் ஜே.வி.பி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியவற்றின் செயற்பாட்டாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்படவுள்ள கல்வித் திட்டங்கள் குறித்தும் இந்த சந்திப்பு வேளையில் கலந்துரையாடப்பட்டது.

(அ)

# பதவி விலகுகிறார் பிரிட்டன் பிரதமர்!



லண்டன், ஜூன். 23

பிரித்தானியப் பிரதமர் மற்றும் தொழிற்கட்சியின் தலைவர் பதவிகளிலிருந்து தான் விலகப் 07

# ஐ.நா. சித்திரவதை தடுப்பு உபகுழுவின் இரகசிய அறிக்கை விரைவில் அரசுக்கு!

கொழும்பு, ஜூன். 23

இலங்கைக்கு 9 நாள்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த ஐக்கிய நாடுகளின் சித்திரவதைத் தடுப்புக்கான உபகுழு, இலங்கைக்கான தங்களது விஜயத்தை நாளை நிறைவு செய்யவுள்ளது.

அதன்படி, இந்த குழு தமது கள ஆய்வுகளின் அடிப்படையிலான இரகசிய முதற்கட்ட அவதானிப்பு அறிக்கையை இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவுள்ளது.

கடந்த ஜூன் 15 ஆம் திகதி இலங்கை வந்தடைந்த நான்கு உறுப்பினர்களைக் கொண்ட இந்தக் குழுவினர், நாடளாவிய ரீதியிலுள்ள சிறைச்சாலைகள் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கு திடீர் விஜயங்களை மேற்கொண்டு கைதிகளின் நிலைமைகளை ஆராய்ந்ததுடன், அரசாங்க அதிகாரிகளையும் 07

# 21 மாத ஆட்சியால் நாட்டில் வறுமை மட்டுமே அதிகரிப்பு!

## விஜயதாஸ ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 23

கடந்த 21 மாத கால ஆட்சியில் நாட்டில் வறுமை மட்டுமே அதிகரித்துள்ளதாக முன்னாள் அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

கெஸ்பேவ பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிறைவேற்று அதிகாரத்தையும், 07

# பாதுகாப்பற்ற கிணற்றுக்குள் வீழ்ந்த பெண் குழந்தை பலி!

## பிரமந்தனாறு பகுதியில் துயரம்

கிளிநொச்சி, ஜூன். 23

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரமந்தனாறு ஆறாம் வாய்க்கால் பகுதியில் பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்த இரண்டு வயதுப் பெண் குழந்தை உயிரிழந்துள்ளது.

பிரமந்தனாறு ஆறாம் வாய்க்கால் பகுதியில் தங்கியிருந்த இளம் குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு வயது பெண் குழந்தை, பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி வீழ்ந்துள்ளது. 07

# அமைச்சர் ஆனந்த விஜேபாலவுக்கு எதிரான மனுவை முன்னெக்க உயர்நீதிமன்று அனுமதி!

கொழும்பு, ஜூன். 23

பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவுக்கு உள்ள தகுதியை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை முன்னெடுத்து செல்ல உயர் நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

பொதுஜன பெரமுனவின் முன்னாள் பொதுச் செயலாளர் ரேணுகா பெரேரா தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த பின்னரே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஆனந்த விஜேபால பாராளுமன்ற 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் “ஹலோ ட்ரஸ்ட்”, “மக்” அர்ப்பணிப்பான சேவை!

## மாகாண ஆளுநர் வேதநாயகன் பாராட்டு



யாழ்ப்பாணம், ஜூன். 23

போரால் இடம்பெயர்ந்த மக்களின் துரித மீள்குடியமர்வு நடவடிக்கைகளுக்கும், பாதுகாப்பான வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும் “ஹலோ ட்ரஸ்ட்“, “மக்“ நிறுவனங்களின் அர்ப்பணிப்பான பணிகள் மிகப்பெரிய உதவியாக அமைந்திருந்தன என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் பாராட்டியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் மனிதாபிமான அடிப்படையில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை முன்னெடுத்து வரும் “ஹலோ ட்ரஸ்ட்“ மற்றும் “மக்“ ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று திங்கள்கிழமை காலை நடைபெற்றது.

இக்கலந்து ரையாடலின் போது, மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்கள் வடக்கு மாகாணத்தில் இது வரை ஆற்றியுள்ள அளப்பரிய சேவைகளுக்கு ஆளுநர் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்தார். குறிப்பாக, போரால் இடம்பெயர்ந்த மக்களின் துரித மீள்குடியமர்வு நடவடிக்கைகளுக்கும், பாதுகாப்பான வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும் இந்நிறுவனங்களின் அர்ப்பணிப்பான பணிகள் மிகப்பெரிய உதவியாக அமைந்திருந்ததை அவர் இதன் போது நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

மேலும், வடக்கு மாகாணத்தில் முழுமையான பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய எஞ்சிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகள் மற்றும் அதற்கான சவால்கள் தொடர்பாகவும் இச்சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்த விசேட கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சிவபாதசுந்தரம் சத்தியசீலனும் கலந்துகொண்டார்.

அத்துடன், மக் நிறுவனத்தின் சார்பில் அதன் தொழில்நுட்ப மற்றும் செயற்பாட்டு முகாமையாளர் அண்டி கிரம்ப், வாழ்வாதார நிபுணர் ஹரிஷா, திறன் அபிவிருத்தி நிபுணர் செந்தூரன் ஆகியோரும், ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் சார்பில் இலங்கைக்கான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் ஹன்னா பிக்டன், செயற்பாட்டு முகாமையாளர் விதுசன் அந்தோனி, சமூகத் தொடர்பு முகாமையாளர் ஏ.அருள்குணசீலன் ஆகியோரும் பங்கேற்றனர்.

# நாங்கள் திட்டமிட்ட முறையில் கண்காணிக்கப்படுகின்றோம்!

## சுரேஷ் சாலேயின் மனைவி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 23

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் அரச புலனாய்வுச் சேவையின் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயின் மனைவி மனோரி சாலே, தனது குடும்பத்தினர் திட்டமிட்ட முறையில் கண்காணிக்கப்பட்டு வருவதாகக் குற்றம் சாட்டி, குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையிடம் உத்தியோகபூர்வமாக முறைப்பாடு செய்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துடன் தொடர்புடையவர் என நம்பப்படும் சிவில் உடையில் வந்த நபர் ஒருவர், தன்னையும் தனது இரு பிள்ளைகளையும் தொடர்ச்சியாகக் கண்காணித்து வருவதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் தங்களின் தந்தையின் உடல்நிலை குறித்துக் கண்டறிவதற்காக நேற்று முன் தினம் சென்ற தனது 22 வயதுடைய மகன் மற்றும் 17 வயதுடைய மகள் ஆகியோரை அந்த நபர் பின்தொடர்ந்து சென்று, தனது கைத்தொலைபேசி மூலம் புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

குறித்த நபர் இதற்கு முன்னரும் தேசிய மருத்துவமனை வளாகத்திலும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அருகிலும் நடமாடியதை தான் கண்டதாகக் குறிப்பிட்டுள்ள மனோரி சாலே, இந்தச் சட்டவிரோத கண்காணிப்பு நடவடிக்கை யாருடைய உத்தரவின் கீழ் முன்னெடுக்கப்பட்டது என்பதைக் கண்டறிய சுயாதீன விசாரணை ஒன்றை நடத்துமாறு அந்தப் பாதுகாப்பு அதிகார சபையை அவசரமாக வலியுறுத்தியுள்ளார்.

2019 உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகளின் கீழ் கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி கைது செய்யப்பட்ட சுரேஷ் சாலே, தற்பொழுது சி.ஐ.டி. காவலில் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# எட்டு மாதங்களின் பின்னர் இடம்பெற்ற வவுனியா மாநகரசபை அமர்வில் அமளி!

## முதல்வருக்கு எதிராக எதிரணியினர் கோசம்

வவுனியா, ஜூன். 23

உயர் நீதிமன்ற உத்தரவின் படி 8 மாதங்களுக்கு பின்னர் நேற்று இடம்பெற்ற மாநகர சபையின் அமர்வில் குழப்ப நிலை ஏற்பட்டது.

வவுனியா மாநகர சபையின் மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாட்டுக்கு இடைக்கால தடை உத்தரவை கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியிருந்தது. சபை உறுப்பினர்கள் இருவர் தாக்கல் செய்த வழக்கின் அடிப்படையில் அந்த உத்தரவு வழங்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த வழக்கு இன்னும் முடிவடையாதபோதும் சபை மீது விதிக்கப்பட்ட தடை உத்தரவை நீக்கி உயர்நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது. இதனையடுத்து 8 மாதங்களாக முடக்கப்பட்டிருந்த சபையின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் சபையின் அமர்வு முதல்வர் சு.காண்டீபன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது முதல்வர் மீது ஊழல் குற்றச்சாட்டு உள்ளமையால் அவர் தலைமையில் இக்கூட்டத்தை நடத்த அனுமதிக்கமாட்டோம் எனவும் எனவே இதனைக் குழுநிலை விவாதமாக முன்னெடுக்குமாறும் எதிர்தரப்பு உறுப்பினர்கள் கோரினர்.

இதனால் சபையில் ஆளும் எதிர்த்தரப்பு உறுப்பினர்களுக்கிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டு குழப்பத்துடன் சபை ஒத்திவைக்கப்பட்டது.

முதல்வர் மீது ஊழல் குற்றச்சாட்டு உள்ளமையால் அவர் பதவி விலகவேண்டும். அவர் தலைமையில் சபைக் கூட்டத்தை நடத்தவிடமாட்டோம். பதில் முதல்வர் ஒருவரைத் தெரியுங்கள். அல்லது இந்தக் கூட்டத்தினை குழுநிலை விவாதமாக நடத்துங்கள். அத்துடன் மாநகர சபையின் அடிப்படை கட்டளைச் சட்டங்கள் மீறப்பட்டுள்ளன.

# நெடுந்தீவில் இலவச மருத்துவ முகாம்!

யாழ்ப்பாணம், ஜூன். 23

யாழ் மருத்துவ சங்கமும், மருத்துவ பிரதிநிதிகள் சங்கமும் இணைந்து நடத்திய இலவச மருத்துவ முகாம் நெடுந்தீவு கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

பொது வைத்திய நிபுணர், இதய சிகிச்சை நிபுணர், குழந்தை வைத்திய சத்திர சிகிச்சை நிபுணர், தோல், சரும நோய்களுக்கான நிபுணர், சத்திர சிகிச்சை நிபுணர், பெண் நோயியல், மகப்பேற்று வைத்திய நிபுணர், கண் மருத்துவ நிபுணர் உட்பட மேலும் பல மருத்துவர்கள் இந்த மருத்துவ முகாமில் இணைந்துகொண்டு மக்களுக்கான மருத்துவ ஆலோசனைகளை வழங்கினர்.

இதன்போது நெடுந்தீவு மக்கள் பலர் கலந்து கொண்டு மருத்துவ ஆலோசனைகளைகளையும், மருத்துவ சேவைகளையும் பெற்றுக்கொண்டனர். (அ)

# மாகாண சபை முறை, அதிகாரப் பகிர்வு குறித்து கரைதுறைப்பற்று மண்டபத்தில் கலந்துரையாடல்

முல்லைத்தீவு, ஜூன். 23

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் ஏற்பாட்டில் மாகாண சபை முறைமையும் அதிகாரப் பகிர்வும் எனும் கலந்துரையாடல் நேற்று முன் தினம் கரைதுறைப்பற்று பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் மௌன வணக்கம் செலுத்தப்பட்டு மங்கள விளக்கேற்றி ஆரம்பிக்கப்பட்ட கலந்துரையாடலில் மாகாண சபை இன்றைய தமிழ் அரசியலின் உயிர்நாடி, சமஷ்டிக்கான வழித்தடமாக மாகாண சபை, நீர்ப்பாசனம் மற்றும் விவசாயத்தில் மாகாண சபைக்கான அதிகாரங்களும் அதன் வீச்செல்லைகளும், மாகாண காவல்துறை அதிகாரிகங்களும் வீச்செல்லைகளும் ஆகிய தலைப்புகளில் ஆழமான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இந்தக் கருத்தாடலில் மூலோபாயக் கொள்கைகளுக்கான திருகோணமலை நிலையத்தின் நிறுவக இயக்குநரும் அரசியல் ஆய்வாளருமான ஆ.யதீந்திரா, யாழ் பல்கலைக்கழக சட்டத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி. கோசலை மதன், மூத்த கல்வியியலாளர் பேராசிரியர் சுப்பிரமணியம் சிவகுமாரன், யாழ் பல்கலைக்கழக அரசியல்துறை முதுநிலை விரிரையாளர் கலாநிதி கே.ரி. கணேசலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தியிருந்தனர்.

வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் தலைமையில் ஆரம்பமான இந்த கலந்துரையாடலில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் முக்கியஸ்தர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சந்திரகுமார் ,முன்னாள் வடமாகாணக் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன், மாந்தை கிழக்கு உப தவிசாளர் ச.சத்தியவரதன், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர்களான க.விஜிந்தன், க.தவராசா, பிரதேச சபையின் உறுப்பினர்கள், பொதுமக்கள் சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்பினர் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ

# முல்லைத்தீவில் டித்வாவால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கும் நிகழ்வு

## புதிய வீடமைப்புத் திட்டத்துக்கும் அடிக்கல்

முல்லைத்தீவு, ஜூன். 23

“டித்வா“ சூறாவளியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கும் நிகழ்வும் புதிய வீடமைப்புத் திட்டத்தின் அடிக்கல் நாட்டும் நிகழ்வும் கூட்டுறவு அபிவிருத்தி பிரதியமைச்சர் உபாலி சமர சிங்க தலைமையில் முல்லைத் தீவு புதுக்குடியிருப்பில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

சூறாவளி காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 1,121 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ள நிலையில், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 50 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டதுடன் புதிய வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் இடம் பெற்றது.

அதிகளவிலான வீட்டு சேதங்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் பதிவாகியுள்ளதுடன், அப்பகுதியில் மட்டும் 499 வீடுகள் சேதமடைந்துள்ளன.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

23.06.2026 செவ்வாய்க்கிழமை

பராபவ வருடம், ஆனி 08

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# அரசியல் கட்சிகளுக்கு சஜித் பிரேமதாசவின் அழைப்பு

ஐக்கிய தேசிய கட்சியையும் ஏனைய கட்சிகளையும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையுமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச அழைப்பு விடுத்திருக்கிறார்.

ஞாயிறன்று கண்டியில் மல்வத்தை பௌத்த பீடத்தின் மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீசித்தார்த்த சுமங்கள தேரரைச் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களுடன் பேசிய பிரேமதாச ஐ.தே.க.வுடன் கொள்கைகள் தொடர்பில் கருத்தொருமிப்பைக் காணமுடியும் என்றாலும், பதவிகளை பகிர்ந்து கொள்வதற்கான எந்தவொரு சூத்திரத்தையும் தனது கட்சி ஏற்றுக் கொள்ளாது என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

கடந்த வாரம் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து பேசிய பின்னணியில் பிரேமதாச விடுத்திருக்கும் இந்த அழைப்பு எதிர்க்கட்சி அரசியலில் தொடர்ந்து நீடித்துவரும் முக்கியமான ஒரு சங்கடத்தை அதாவது கொள்கை ரீதியான இணக்கப்பாட்டுக்கு வருவதற்கும் கட்சிகளுக்கு இடையிலான போட்டிகளுக்கும் இடையிலான இழுபறியை வெளிக்காட்டுகிறது.

கொள்கை உடன்பாட்டின் அடிப்படையில் ஐ.தே.க.வுக்கும் ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் கதவுகளைத் திறந்துவிடும் அதேவேளை, பதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்கு எந்த சூத்திரத்தையும் நிராகரிப்பதன் மூலமாக பிரேமதாச ஒரு நுட்பமான அரசியல் கயிற்றின் மீது நடக்க் முயற்சிக்கிறார்.

ஆழமான கொள்கை முரண்பாடுகளின் காரணமாக அல்லாமல், பிரதானமாக தலைமைத்துவப் போட்டி காரணமாகவே 2020 ஆம் ஆண்டில் ஐ.தே.க.வில் இருந்து பிரிந்து பிரேமதாச ஐக்கிய மக்கள் சக்தியை அமைத்தார். முக்கியமான விவகாரங்களில் இரு கட்சிகளுக்கும் இடையில் அடிப்படையில் வேறுபாடு இல்லை.

பதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்கு முன்கூட்டியே திட்டமிடப்பட்ட எந்த சூத்திரமும் இல்லாமல் தான் கூட்டணிகள் அமைய வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதன் மூலம் பிரேமதாச தனது கட்சியை எதிர்காலத்தில் அமையக்கூடிய எந்த கூட்டணியிலும் முதன்மையான பங்காளியாக முன்னிறுத்துகிறார். " நீங்கள் வந்து இணைவதை நான் வரவேற்கிறேன். ஆனால், பழைய நிலைமையை எதிர்பாராமல், ஐக்கிய மக்கள் சக்தியின் தற்போதைய தகுதியையும் எனது தலைமையையும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்பதே ஐ.தே க.வினருக்கும் ஏனைய குழுக்களுக்கும் அவர் மறைமுகமாக கூறுகின்ற செய்தி.

ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு நம்பகமான சவாலை ஏற்படுத்த வேண்டுமானால், நிச்சயமாக ஐக்கியப்பட வேண்டும் என்பதையும் தங்களுக்குள் பிரிந்து கிடப்பது ஆளும் கட்சிக்கே அனுகூலமாக அமையும் என்பதையும் எதிர்க்கட்சிகள் உணர்ந்திருக்கின்றன. ஆனால், முன்னென்றும் இல்லாத வகையில் பலவீனப்பட்டிருக்கும் இந்த கட்சிகள் மக்கள் மத்தியில் அவற்றின் செல்வாக்கை மீளக் கட்டியெழுப்புவதில் பெரும் சவாலை எதிர்நோக்குகின்றன.

பதவிப்பகிர்வு இல்லை என்ற நிலைப்பாடு பொதுவெளியில் பேசுவதற்கு சிறந்த அரசியல் தந்திரமாகத் தெரியலாம். ஆனால், நடைமுறையில் கூட்டணிகளை உருவாக்குவதில் இது கடுமையான பின்னடைவுகளை ஏற்படுத்தும். கட்சிகள் கொள்கை ரீதியான நல்லெண்ணத்துக்காக மாத்திரம் கைகோர்ப்பது இல்லை. முக்கியமான உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் திருப்திப்படுத்த பாராளுமன்றப் பிரதிநிதித்தும் மற்றும் எதிர்கால அமைச்சரவைப் பதவிகள் போன்ற உத்தரவாதங்கள் அரசியல் கட்சிகளுக்கு தேவைப்படுகின்றன.

பேச்சுவார்த்தை மூலமான பதவிப் பகிர்வுச் சூத்திரம் எதுவுமின்றி பிரேமதாசவினால் வகுக்கப்படும் ஒரு கட்டமைப்புக்கு முழுமையாக அடிபணிவது தங்களது அரசியல் கௌரவத்துக்கு பாதிப்பாக அமையும் என்று ஐ.தே.க. வின் விசுவாசிகள் நிச்சயம் நினைப்பார்கள்.

தற்போதைய எதிரணி கட்சிகள் மத்தியில் தனது ஐக்கிய மக்கள் சக்தியே ஒப்பீட்டளவில் பலம்பொருந்தியதாக இருக்கிறது என்ற நம்பிக்கையில் பிரேமதாச தனது நிபந்தனைகளின் அடிப்படையில் அரசாங்கத்துக்கு எதிரான கூட்டணியை அமைக்க எதிர்பார்க்கிறார். அவரது நிலைப்பாட்டில் தளர்வு ஏற்படாத பட்சத்தில், எதிரணி கட்சிகள் தற்போது இருப்பதைப் போன்று சிதறிய நிலையிலேயே தொடர்ந்து நீடிக்க வேண்டியிருக்கும்.

தனது கட்சியைத் தவிர்த்து மற்றைய எதிரணி கட்சிகளினால் அரசாங்கத்துக்கு சவாலை ஏற்படுத்தக்கூடிய கூட்டணியை அமைக்க முடியாது என்று பிரேமதாச நினைக்கிறார் அவ்வளவுதான்.

# எரிபொருள் விலை நிர்ணயக் குழப்பத்திற்கு அவசரமாகத் தீர்வு காணவேண்டும்

***முன்னைய சகல அரசாங்கங்களையும் போன்றே , தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் விடயங்களைத் திசைதிருப்புவ தில் மிகச்சிறந்த திறமையைக் கொண்டுள்ளது. பாராளுமன்றத்திலோ அல்லது வேறு இடங்க ளிலோ எரிபொருள் விலை தொடர்பான பிரச்னைகள் எழுப்பப்படும் போதெல்லாம் அரசாங்கம் நிலைமையைக் குழப்புகிறது.***

*அரசாங்கத் தலைவர்கள் எரிபொருள் செலவு கணக்கீடுகள் பற்றிய கேள்விகளுக்கு மழுப்பலான பதில்களை வழங்குகிறார்கள். இது, அவர்கள் தங்களது வாதங்களை நியாயப்படுத்துவதற்காக உண்மைகளை வளைத்து, சுமாராக எண்களைக் கூறுகிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. விசித்திரமாக, அவர்களின் இந்தக் கூற்றுகள் சவாலுக்கு உட்படுத்தப்படாமல் போகின்றன. எதிர்க் கட்சி இதில் திக்குமுக்காடிப் போயுள்ளது போல் தெரிகிறது. அதனிடம் முறையான கவனம் இல்லை.*

*அரசாங்கத்தின் எரிபொருள் விலை நிர்ணய முறைமை மற்றும் விற்பனை நிலைய விலைகள் (pump prices) குறித்த கூற்றுகளுக்கு சவால் விடுக்க வேண்டியதன் அவசியத்தை ஒரு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவழியாக உணர்ந்துள்ளார். பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ, எரிபொருள் விலைகள் எவ்வாறு கணக்கிடப்படுகின்றன என்பதை வெளிப்படுத்துமாறும், முழுமையான செலவு விபரங்களை பகிரங்கப்படுத்துமாறும் அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.*

*இதன் மூலமே எரிபொருள் மானியம் வழங்கப்படுவதாக அரசாங்கம் கூறும் கூற்று உண்மையா அல்லது பொய்யா என்பதை நுகர்வோர் அறிந்துகொள்ள முடியும். இதை எதிர்க்கட்சி எப்போதோ செய்திருக்க வேண்டும்.*

*அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையில் தற்காலிக சமாதான ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து, உலக சந்தையில் ஏற்பட்டுள்ள எண்ணெய் விலை வீழ்ச்சிக்கு ஏற்ப உள்நாட்டு எரிபொருள் விலைகளைக் குறைக்குமாறும் ராஜபக்ஷ அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளார்.*

*சுவாரசியமாக, ராஜபக்ஷவின் இந்த வாதம், ஜூன் மாதத்திற்குப் பிறகு "தற்போதைய எரிபொருள் மானியத்திற்கு" நிதி கிடைக்காது என்ற அரசாங்கத்தின் கூற்றுக்கு எதிராகப் போராடும் சில எதிர்க்கட்சிகளின் நிலைப்பாட்டுடன் முரண்படுகிறது. மேற்படி போராட்டங்களில் இருந்து நாம் அறிந்துகொள்வது என்னவென்றால், எதிர்க்கட்சியின் ஒரு பகுதியினர் எரிபொருளுக்கு உண்மையில் மானியம் வழங்கப்படுகிறது என்றும், அந்த மானியம் தொடர்ந்து பேணப்பட வேண்டும் என்றும் நம்புகின்றனர்.*

*இந்த எரிபொருள் மானியம் என்று கூறப்படும் விடயம் குறித்த முரண்பாடான கூற்றுகளைக் கருத்தில் கொண்டு, எரிபொருள் செலவு விபரங்களை அரசாங்கம் வழங்க வேண்டும் என்றும், அவை சுயாதீனமாக பரிசோதிக்கப்பட வேண்டும் என்றும் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். எரிபொருள் விலைகளைப் பொறுத்தவரை அரசாங்க அரசியல்வாதிகள் வழங்கும் புள்ளிவிவரங்கள் தர்க்கரீதியாக ஒத்துப்போவதாகத் தெரியவில்லை.*

*கடந்த மாதம், ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க, ஒரு லீற்றர் டீசலின் உண்மையான செலவு **720** ரூபாய் என்றும், ஆனால் அது அந்த நேரத்தில் **392** ரூபாய்க்கு விற்கப்பட்டதாகவும் பகிரங்கமாகத் தெரிவித்தார். (தற்போதைய டீசல் விலை லீற்றருக்கு **407** ரூபாயாகும்.)*

*மேலும், அரசாங்கம் ஒரு லீற்றர் டீசலுக்கு **100** ரூபாய் மானியம் வழங்குவதாகவும் ஜனாதிபதி உரிமை கோரினார். உலகளாவிய எண்ணெய் விலை வீழ்ச்சிக்கு ஏற்ப உள்ளூர் எரிபொருள் விலைகளை உடனடியாகக் குறைக்க முடியாது என்ற தனது வாதத்தை நியாயப்படுத்துவதற்காக, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவும் அண்மையில் ஜனாதிபதியின் இந்தக் கூற்றைத் திரும்பக் கூறியுள்ளார்.*

*ஜனாதிபதியின் கூற்றுப்படி பார்த்தால், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் தனியார் எரிபொருள் நிறுவனங்களும் பெரும் நட்டத்தை எதிர்கொள்கின்றன என்று அர்த்தம்.*

*வரிகள் மற்றும் ஒரு லீற்றர் எரிபொருளுக்கு விதிக்கப்படும் **50** ரூபாய் விசேட நட்டஈட்டு வரி குறித்து அரசாங்கம் மௌனம் காக்கிறது. இந்த வரியை "செஸ்" (cess) வரியாக மாற்றி, தனியார் எரிபொருள் நிறுவனங்களிடமிருந்தும் திறைசேரி அதனை வசூலிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவை வீணாகிவிட்டதாக சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் தெரிவிக்கின்றனர்.*

***இந்த விவகாரம் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட வேண்டும். அரசாங்கத்திடமிருந்து எதிர்க்கட்சி அதிகாரபூர்வமாக விளக்கம் கோருமா?***

*மோசடியான முறையில் கொள்வனவு செய்யப்பட்ட தரம் குறைந்த நிலக்கரி காரணமாக நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட மின் இழப்பை ஈடுசெய்ய, கூடுதல் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு டீசல் பெருமளவில் பயன்படுத்தப்பட்டது. இதனால் ஏற்பட்ட நஷ்டத்தை மீட்டெடுப்பதற்காக, அரசாங்கம் எரிபொருளுக்கு நியாயமற்ற முறையில் அதிக விலை உயர்வைச் சுமத்துவதாக நம்பப்படுகிறது.*

*ஈரான் போரின் உச்சக்கட்டத்தின் போது, விநியோகத் தடைகளைத் தவிர்ப்பதற்காக ஒரு பீப்பாய் **281** டொலர் முதல் **303** டொலர் வரையிலான விலையில் டீசல் ஏற்றுமதிகளைக் கொள்வனவு செய்ததாக இலங்கை பெற்றோல.யக் கூட்டுத்தாபனம் ஒப்புக் கொண்டுள்ளது. நிலக்கரி கொள்வனவு மோசடி எதுவும் இல்லாமல், நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் அதன் முழுத் திறனான **900** மெகாவாட்டை உற்பத்தி செய்து இயங்கியிருந்தால், கூட்டுத்தாபனம் இந்தளவுக்கு அவநம்பிக்கையான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்காது.*

*எரிபொருள் விலைகள் திருத்தப்படும் போதெல்லாம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் நிதியமைச்சும் துல்லியமான செலவு விபரங்களை வழங்க வேண்டும் என்று கோருவது முற்றிலும் நியாயமானது. அப்போதுதான் உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் சரியாக உள்ளனவா அல்லது எரிபொருள் விலைகள் தன்னிச்சையாக உயர்த்தப்படுகின்றனவா என்பதை பொதுமக்கள் பார்க்க முடியும்.*

*நல்லாட்சியை ஏற்படுத்துவதாக வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம், எரிபொருள் விலையைத் தீர்மானிக்கும் செயற்பாட்டில் வெளிப்படைத்தன்மையைப் பேண வேண்டும்.*

*எரிபொருள் விலைகளை பகுத்தறிவு மற்றும் நியாயமான முறையில் தீர்மானிக்க செலவுப் பிரதிபலிப்பு எரிபொருள் விலை சூத்திரம்* (cost reflective fuel pricing formula) *உதவுகிறது என்று கூறி, அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் அதனைப் பயன்படுத்தி வருகின்றன. அப்படியென்றால், அதனை சட்டப்பூர்வமாக நடைமுறைப்படுத்தக்கூடியதாக மாற்றி, வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக் கூறலையும் உறுதி செய்ய அவர்கள் ஏன் இதுவரை அக்கறை காட்டவில்லை என்ற கேள்வி எழுகிறது.*

**(த ஐலண்ட் ஆசிரிய தலையங்கம், 22 ஜூன் 2026)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள்.

**இடபம்**
சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள்.

**மிதுனம்**
கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. புது வேலை அமையும்.

**கடகம்**
சொத்து வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். புது வாகனம் வாங்குவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் கலந்துக் கொள்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும். கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். நீங்கள் நகைச்சுவைக்காக சொல்ல கூடிய சில கருத்துக்கள் கூட சீரியசாக வாய்ப்பிருக்கிறது.

**துலாம்**
பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள்.


**தனுசு**
கணவன் மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். உறவினர்கள் உங்களைப் புரிந்துக் கொள்வார்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மனஇறுக்கங்கள் உருவாகும். அதிக வேலைச்சுமையால் அவ்வப்போது கோபப்படுவீர்கள். விமர்சனம் கண்டு அஞ்ச வேண்டாம்.

**கும்பம்**
விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். சகோதரங்களால் ஆதாயம் அடைவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை மதித்து பேசுவார்.

**மீனம்**
பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். கனவு நனவாகும் நாள்.

# மைக்கல் வி.கவின் விளையாட்டு விழா!




யாழ்ப்பாணம், ஜூன். 23

வடமராட்சி மைக்கல் விளையாட்டு கழகத்தின் துட்டுப்பாட்ட இறுதிப் போட்டிகளும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்று முன் தினம் மைக்கல் விளையாட்டு கழக மைதானத்தில் மைக்கல் விளையாட்டு கழக துட்டுப்பாட்ட அணித் தலைவர் மனோகரன் ரகுவரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் மங்கல சுடர்களை நிகழ்வின் பிரதம விருந்தினரும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளருமான செல்வராசா கஜேந்திரன், சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும் ஊடகப் பேச்சாளருமான சட்டத்தரணி கனகரட்னம் சுகாஷ், சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்ட இடைக்காடு மகா வித்தியாலய ஆசிரியர் சிவசுகிர்தன், வடமராட்சி ஊடக இல்ல தலைவர் மகாலிங்கம், ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் ராகவன், யாழ்.மாவட்ட தடகள வீரர் முரளிதரன், சமூக மாற்றத்திற்கான ஊடக மைய தலைவர் காண்டீபன், தொழில் நுட்ப உத்தியோகத்தர் சிறீதரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

அதனை தொடர்ந்து இறுதிப் போட்டிக்கு தெரிவாகிய அல்வாய் யூத் அணி மற்றும் மாலை சந்தை மைக்கல் அணி ஆகியவற்றிற்கான இறுதிப் போட்டி வீரர்கள் அறிமுகம் இடம்பெற்றதை தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமகின.

இதில் மாலை சந்தை மைக்கல் வெற்றி பெற்றது.

பல்வேறு பிரிவுகளில் நடத்தப்பட்ட மென்பந்து துடுப்பாட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய கழகங்களுக்கான பரிசில்கள், பதக்கங்கள், கேடயங்களை விருந்தினர்கள் வழங்கினர். (அ)

# சிறுவர்கள் தொழில் ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு வீதி நாடகம் யாழில்!

யாழ்ப்பாணம், ஜூன். 23

சிறுவர் தொழிலை முற்றாக ஒழிக்கும் நோக்கில் தொழில் திணைக்களம் வடக்கு வலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு வீதி நாடக நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் முற்றவெளிச் சந்தை முன்றலில் நடைபெற்றது.

வடக்கு வலய தொழில் திணைக்களத்தின் பிரதித் தொழில் ஆணையாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு, “சிறுவர் தொழிலை இல்லாது ஒழித்தல்” என்ற தொனிப்பொருளை மையமாகக் கொண்டு நடத்தப்பட்டது.

கருப்பையா சத்தியசீலன் தலைமையிலான நீர்வேலி செம்முகம் நாடக ஆற்றுகைக் குழுவினர் விழிப்புணர்வு வீதி நாடகத்தை அரங்கேற்றி, சிறுவர் தொழிலின் பாதிப்புகள் மற்றும் அதனைத் தடுப்பதன் அவசியம் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைத்தனர்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை அலுவலகத்தின் பொறியியலாளர், பிரதித் தொழில் ஆணையாளர் அலுவலகத்தின் உதவித் தொழில் ஆணையாளர், சட்ட ஆலோ சகர், தொழில் உத்தியோகத் தர்கள், ஐசாக் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், யாழ்ப் பாண பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தர் மற்றும் சிறுவர் உரிமைகள் மேம் பாட்டு உத்தியோகத்தர் உள் ளிட்ட பலரும் கலந்து கொண் டனர். (அ)

# மன்னாரில் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கி வந்த உற்பத்தி நிலையத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை

மன்னார், ஜூன். 23

மன்னார் தரவன் கோட்டைப் பகுதியில் இயங்கி வந்த பனைபொருள் உற்பத்தி நிலையம் ஒன்றில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்கள் சுகாதாரமற்ற முறையில் உள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுக்கு அமைவாக பொது சுகாதார பரிசோதகர்கள் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த நிலையத்தில் பனங்கள்ளு பயன்படுத்தி சில பொருள்கள் தயாரிக்கப்பட்டு வந்த நிலையில், குறித்த பொருள்கள் தயாரிப்பில் பல்வேறு சுகாதாரச் சீர்கேடுகள் காணப்பட்டுள்ளதாக சுகாதார பரிசோதகர்களுக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

குறித்த பகுதிக்குச் சென்ற மன்னார் நகர சபை மற்றும் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சுகாதார பரிசோதகர்கள் சோதனைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது அந்தப் பகுதியில் உற்பத்தி பொருள்கள் தயாரிக்கப்படும்போது பல்வேறு சுகாதார குறைபாடுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

இதனை அடுத்து அந்த உற்பத்தி நிலையத்துக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (அ)

# ஈழத்தமிழர் அரசமைப்பு நிர்ணய பொதுச் சபையின் கூட்டம் யாழில்!



யாழ்ப்பாணம், ஜூன். 23

ஈழத்தமிழர் அரசியலமைப்பு நிர்ணய பொதுச்சபை கூட்டம், யாழ்ப்பாணத்திலுள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அக்கட்சியின் செயலாளர் செ. கஜேந்திரன், சட்டத்தரணிகளான கலாநிதி குமாரவடிவேல் குருபரன், கனகரத்தினம் சுகாஷ், தமிழ் தேசிய கட்சியின் தலைவர் என்.சிறீகாந்தா, தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், சமயத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நாடு முழுவதும் வைத்தியசாலைகளில் 23 ஆயிரம் தாதியர்கள் வெற்றிடங்கள்!

## வைத்தியசாலை கட்டமைப்பு வீழ்ச்சியடையும் அபாயம்

கொழும்பு, ஜூன். 23

நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் சுமார் 23,000 தாதியர்களுக்கான வெற்றிடம் நிலவுவதனால், தாதியர் குழாம் கடுமையான வேலைப்பளு மற்றும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளதாக ஐக்கிய தாதியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு தற்போதைய அரசாங்கம் எந்தவித சாதகமான நடவடிக்கைகளையும் எடுக்கத் தவறியுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் தென்னே ஞானானந்த தேரர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய தென்னே ஞானானந்த தேரர் பின்வரும் விடயங்களைக் குறிப்பிட்டார்.

தற்போதைய மருத்துவமனைக் கட்டமைப்புக்குள் சுமார் 23,000 தாதியர்கள் மற்றும் சுமார் 14,000 கனிஷ்ட பணியாளர்கள் எனப் பாரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இந்த நிலைமையின் காரணமாக, இரண்டு தாதியர்கள் செய்ய வேண்டிய வேலைகளை ஒரு தாதி மட்டுமே செய்ய வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சில சந்தர்ப்பங்களில் தாதியர்கள் தொடர்ச்சியாகப் பல நாள்கள் கடமையாற்ற வேண்டியுள்ளதால், அவர்களால் தாங்க முடியாத வேலைப்பளு உருவாகியுள்ளது.

அண்மையில் கிண்ணியா மருத்துவமனையில் இடம்பெற்ற சம்பவம் உள்ளிட்ட பல பிரச்னைகளுக்கு இதுவே அடிப்படைக் காரணமாகும்.

இந்தத் தாதியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடியாகக் குறுகிய, இடைக்கால மற்றும் நீண்டகால வேலைத் திட்டங்கள் வகுக்கப்படாவிட்டால், ஒட்டுமொத்த மருத்துவமனைக் கட்டமைப்பும் முற்றாக வீழ்ச்சியடையும் என அவர் எச்சரிக்கை விடுத்தார்.

நிலைமை மேலும் மோசமடைந்து தாங்க முடியாத மட்டத்தை எட்டுவதற்கு முன்னர், அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டுத் தகுந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டும் என ஐக்கிய தாதியர் சேவை சங்கம் வலியுறுத்தியுள்ளது. (அ)

## கடற்கொந்தளிப்பு எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன். 23

நாட்டைச் சூழவுள்ள பல கடற்பரப்புகளில் பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பான நிலை நிலவுவதன் காரணமாக, வளிமண்டலவியல் திணைக்களம் "அம்பர்" நிறத்திலான அவசர எச்சரிக்கை அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

இந்த அறிவிப்பு, கல்பிட்டியில் இருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கடற்பரப்புகள் மற்றும் காலியில் இருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகள் வரை இருக்கும்என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சாலே விவகாரத்தில் ஜனாதிபதியின் மனிதாபிமானத் தலையீடு அவசியம்!

## உலகளாவிய இலங்கையர் மன்றம்

கொழும்பு, ஜூன். 23

அரச புலனாய்வு சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சாலேயின் உடல்நிலை மோசமடைந்து வருவது தொடர்பாக உடனடியாகக் கவனம் செலுத்தி, மனிதாபிமான அடிப்படையில் தலையீடு செய்யுமாறு உலகளாவிய இலங்கையர் மன்றம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், நீண்ட கால நிர்வாகத் தடுப்புக் காவலில் வைத்திருப்பதற்குப் பதிலாக, சுரேஷ் சாலே தொடர்பான விசாரணையை வெளிப்படையான நீதிமன்ற நடவடிக்கைகள் ஊடாக விரைவுபடுத்துமாறு உலகளாவிய இலங்கையர் மன்றம் கேட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்- சுரேஷ் சாலேயை தொடர்ந்து தடுப்புக் காவலில் வைத்திருப்பது மற்றும் அவரது உடல்நிலை மோசமடைந்து வருவது தொடர்பில் உடனடி கவனம் செலுத்தி, மனிதாபி மான காரணங்களின் அடிப் படையில் தலையீடு செய்ய வேண்டும்.

இலங்கையின் இறையாண்மையையும் தேசிய பாதுகாப்பையும் காக்கும் நோக்கில், உயர்மட்ட இராணுவ அதிகாரியாக சுரேஷ் சாலே தனது வாழ்க்கையின் பல தசாப்தங்களை அர்ப்பணித்துள்ளார்.

எந்தவொரு நபரையும் முறையான குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாமல் நீண்ட கால தடுப்புக் காவலில் வைப்பதைத் தவிர்க்கவேண்டும்.

அதன்படி, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுரேஷ் சாலேயுக்கு ஏதேனும் துரதிர்ஷ்டவசமான நிலை ஏற்பட்டால், அதன் பொறுப்பு தவிர்க்க முடியாத வகையில் அந்த உத்தரவை பிறப்பித்த அதிகார அமைப்பாகிய ஜனாதிபதி செயலகத்தையே சாரும்.

எனவே, சாலேயுக்கு உயர்தர மருத்துவ சிகிச்சைகளை எந்தவித தடையுமின்றி பெறும் வாய்ப்பை உறுதி செய்யவும், அவருடைய பாதுகாப்பை மிகுந்த கவனத்துடன் உறுதிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்-என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# மாகாண சபை தேர்தலில் நிச்சயம் ஐக்கிய மக்கள் சக்தியே வெல்லும்!

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன். 23

நீண்ட காலமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால், அதில் ஐக்கிய மக்கள் சக்தி நிச்சயம் வெற்றியீட்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்துவதற்காக பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தமது கட்சி தொடர்ந்து ஜனநாயக வழிகளில் போராடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கண்டியில் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த பின்னர் ஊடகங்களிடம் பேசிய அவர்,

தற்போதைய அரசாங்கம் ஜனநாயக ரீதியாக ஆட்சிக்கு வந்த போதிலும், அதிகாரங்களைத் தன்வசம் குவித்து வருவதாகக் குற்றம் சாட்டினார்.

எந்தவொரு அரசியல் கட்சிக்கும் பாராளுமன்றத்தில் அளவுக்கு அதிகமான பெரும்பான்மை கிடைக்கக் கூடாது என்றும், அதிகப்படியான பெரும்பான்மை ஆரோக்கியமற்ற அதிகாரக் குவிப்பிற்கே வழிவகுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுமக்களின் சுமையைக் குறைக்கும் வகையில் எரிபொருள் விலை மற்றும் மின்சாரக் கட்டணங்களைக் குறைக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்ட அவர், வறுமை ஒழிப்பிற்கான விரிவான தேசிய வேலைத்திட்டம் ஒன்றை ஐக்கிய மக்கள் சக்தி விரைவில் அறிமுகப்படுத்தும் என்றும் தெரிவித்தார்.

# போலி சுகாதார பரிசோதகர்கள் பொதுமக்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஜூன். 23

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எனத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு, வீடுகள் மற்றும் நிறுவனங்களிடம் இருந்து ஏமாற்றிப் பணம் பறிக்கும் குழுவொன்று இயங்கி வருவதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் டெங்கு ஒழிப்புப் பரிசோதனை நடவடிக்கைகளை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் இந்த மோசடிக்காரர்கள், சட்டபூர்வ நடவடிக்கைகள் எனக் கூறி பொதுமக்களிடம் பணம் கோரி வருவதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் பதில் தலைவர் உபுல் ரோஹண குறிப்பிட்டார்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தங்களது உத்தியோகபூர்வ கடமைகளின்போது எந்தக் காரணம் கொண்டும் எந்தவொரு கட்டணத்தையும் வசூலிப்பதோ அல்லது பணத்தைப் பெற்றுக்கொள்வதோ இல்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எனக்கூறி எவரேனும் பணம் கோரினால், அவர்களுக்குப் பணம் வழங்குவதைத் தவிர்க்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அத்துடன், தங்களைக் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் என அடையாளப்படுத்தி எவரேனும் கடமைகளின் நிமித்தம் பணம் கோரினால், அதிகாரிகளுக்கோ தகவல் வழங்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து முன்னேற்றகரமான விசாரணைகள்!

## வரவேற்கிறார் சிறிநேசன் எம்.பி.

மட்டக்களப்பு, ஜூன். 23

இந்த அரசாங்கம் உயர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்த மான தாக்குதல் விடயத்தில் ஓரளவுக்கு முன்னேற்றகரமான முறையில் விசாரணைகளை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார். நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மட்டக்களப்பு செட்டி பாளையத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய காலகட்டத் தில் முக்கியமானதொரு பேசு பொருளாக இருக்கின்ற விடயம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம் பந்தமான விசாரணையா கும். இந்த உயிர்த்த ஞாயிறு தாக்கு தல் விசாரணையின் போது பாரிய மனித உரிமை மீறல்கள் சம்பந்தப்பட்ட விட யங்களை அவதானிக்க முடிகின்றது.

இந்த உண்மைகளை வெளிக்கொணர வேண்டும் என்கின்ற ஆர்வம் மக்கள் மத்தியிலும், பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியிலும், காணப்ப டுகின்றன. அந்த வகையில் கடந்த காலத்தில் மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜ பக்ஷ, ரணில் விக்கிரமசிங்க, அகிய மூன்று ஜனாதிபதிகள் இருந்திருக்கின்றார்கள். அவர்க ளுடைய காலத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக உண்மைகளை கண்டறிய முடி யவில்லை. அல்லது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக உண்மைகள் மூடிமறைக்கப் பட்டிருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும்.

குறிப்பாக கோட்டாபய ஆட்சிக்கு வரும் போது, உயிர்த்த ஞாயிறு தாக் குதலில் ஈடுபட்ட அனைத்து சூத்திர தாரிகளும் உண்மைக்கு மத்தியில் கொண்டுவரப்படு வார்கள் என பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு வாக்கு றுதி வழங்கியிருந்தார். ஆனால் அவ்வாறு எதுவும் நடக்க வில்லை. அதேவேளை தற்போ தைய நிலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விடயத்தில் நம்பிக்கை ஏற்படக்கூடிய விதத்தில் விசாரணைகள் நகர்ந்து கொண்டிருக்கின்றன.

உளவுத்துறை பிரதானி சுரேஷ் சாலே விசாரிக்கப்பட்டு கொண்டிருக்கின்றார். இவரே இந்த தாக்குதலுடன் சம்பந்தப் பட்டவர் என்கின்ற பல விடயங் கள் பல மட்டங்களில் பேசப்ப டுகின்றன.

இந்த நேரத்தில் ஆளும் கட்சி எதிர்க்கட்சி என்ற பேதம் இல்லாமல் அப்பாவி மக்களின் உயிர்களை கொன்று குவித்த குற்ற செயல்களை செய்தவர்க ளுக்கு தண்டனை கிடைக்க வேண்டும் என்பதுதான் எனது உறுதியான நிலைப்பாடு.

செம்மணி சித்துப்பாத்தியில் இதுவரை 386 என்புக் கூடுகள் எடுக்கப்பட்டதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த புதைகுழியில் இருந்து பல வயது வித்தியாசங்களுக் குட்பட்டவர்களின் என்புக் கூடுகள் வந்து கொண்டிருக்கின் றன. புத்தகப் பைகள், பாற்புட் டிகள் போன்ற ஆதாரப் பொருள் களும் வந்து கொண் டிருக்கின் றன. எனவே இது ஒரு இன அழிப்புக்கான சான்றாக அமை கின்றது. -என்றார்.

(அ)

# காரைதீவில் உணர்வு பூர்வமாக நடந்த தியாகிகள் தின நிகழ்வு!

காரைதீவு, ஜூன். 23

ஈழவிடுதலை போராட்டத் தில் உயிர் நீத்த ஈழமக்கள் புரட் சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் பத்மநாபா மற்றும் போராளிகளின் ஞாப கார்த்தமான 36ஆவது தியாகி கள் தினத்தை முன்னிட்டு, காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக் கழகம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை காரைதீவில் கடின பந்து கிரிக் கெட் சுற்றுப் போட்டியை நடத்தியது.

காரைதீவில் உணர்வு பூர்வ மாக நடந்த தியாகிகள் தினத் தில் தோழர் பத்மநாபா மற்றும் உயிர் நீத்த தோழர்களின் திருவு ருவப் படங்களுக்கு சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

காரைதீவு விவேகானந்தா விளையாட்டுக்கழகத்தின் 39 ஆம் ஆண்டு நிறைவினை முன்னிட்டு, தோழர் பத்மநாபா சமூக சேவை ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கழக தலைவர் வி.தயாபரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு புலம்பெயர் வாழ் தோழர்கள் அனுசரணை வழங்கினர். (அ)

# ஜெயானந்தமூர்த்தி காலமானார்!

மட்டக்களப்பு, ஜூன். 23

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப் பினர் சேனாதிராசா ஜெயானந் தமூர்த்தி (வயது 61) சுகவீனம் காரணமாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலை யில் நேற்று முன் தினம் பிற்ப கல் காலமானார்.

1965 ஆம் ஆண்டு செப்ரெம் பர் 16 ஆம் திகதி பிறந்த இவர், தனது ஆரம்பக் காலத்தில் ஆசி ரியராகப் பணியாற்றியமையு டன், மட்டக்களப்பு மாவட் டத்தின் பிராந்திய செய்தியாள ராகப் பல முன்னணி ஊடகங் களில் திறம்பட ஊடகப் பணி யாற்றியவர் என்பது குறிப்பி டத்தக்கது.

தொடர்ந்து அரசியல் களத் தில் கால் பதித்த அவர், கடந்த 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் சார்பில் போட்டியிட்டு, 44 ஆயிரத்து 457 விருப்பு வாக் குகளைப் பெற்று மட்டக்க ளப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக முதன்முறையா கத் தெரிவு செய்யப்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பின ராக இருந்த காலகட்டத்தில், கடந்த 2008 ஆம் ஆண்டு "அழிக்கப்பட்ட தமிழ் கிராமங் கள்" என்ற வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த ஆவண நூல் ஒன்றை வெளியிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பலத்த உயிர் அச்சுறுத்தல்கள் காரணமாக, அவர் தனது குடும் பத்துடன் பிரித்தானியாவுக்குப் புலம்பெயர நேரிட்டது.

அந்தவகையில், கடந்த 2024 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் கல்குடா தொகுதி இணைப்பாளராக நியமிக்கப் பட்டு, அக்கட்சியின் அரசியல் மற்றும் பிரசாரப் பணிகளில் முன்னின்று உழைத்தார். (அ)

# தமிழர்கள் மீதான படுகொலை நினைவு 36 வருடங்களுக்கு பின்னர் அனுஷ்டிப்பு

அம்பாறை, ஜூன். 23

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை நகரில் 1990 ஜூன் மாதம் 20 ஆந் திகதி நடந்த தமிழர்கள் மீதான படு கொலைகளை நினைவு கூரும் நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்றது.

36 வருடங்களுக்கு பின்னர் கல்முனை அம்மன் கோவில் வீதி சந்தியில் மாலை நினை வேந்தல் நிகழ்வு உணர்வுபூர்வ மாக நடைபெற்றது.

இதன்போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கல்மு னைத் தொகுதி தலைவர் சட் டத்தரணி நிதான்சன் தலைமை யில் குறித்த நிகழ்வு நடைபெற்ற துடன் கல்முனை வாழ் மக்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பு, கல்முனை முன்னாள் மாநகர சபை உறுப்பினர்கள், இளை ஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் ஒரு நிமிட மௌன அஞ்சலி இறந்தவர்க ளுக்காக மேற்கொள்ளப்பட்டது. (அ)

# கும்புறுப்பிட்டி வெடிபொருள்கள் ஆயுதம் மீட்பு!

திருமலை, ஜூன். 23

திருகோணமலை, குச்ச வெளி பொலிஸ் பிரிவிற்குட் பட்ட கும்புறுப்பிட்டி, கொம் பன்குளம் காட்டுப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த பெரும ளவிலான வெடிபொருள்கள் மற்றும் ஆயுதப் பாகங்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

திருகோணமலை பிரிவு குற் றப் புலனாய்வுப் பிரிவு நிலை யப் பொறுப்பதிகாரி பி.ஏ.பி. சமரசிங்கவுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பேரில் இந்தச் சோதனை நட வடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

யுத்தக் காலத்தில் பயன்படுத் தப்பட்டு, பின்னர் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் இந்த ஆயுதப் பாகங்கள், காப்புக்காட்டுப் பகு தியில் உள்ள சிறிய இரும்புத் தகடு ஒன்றினால் மூடப்பட்ட குழிக்குள், பீப்பாயொன்றில் உரப்பையினுள் இட்டு புதைக் கப்பட்டிருந்தன.

# மரண அறிவித்தல்



திரு. அன்ரனி லோறன்ஸ்

மலர்வு 25.10.1930 உதிர்வு 19.06.2026

(திருகோணமலை பிரிட்டிஷ் கடற்படையின் வாகன பொறியியல் மேற்பார்வையாளராகவும் பின்னர் பிரத்தியேக தனியார் வாகன சாரதி பயிற்றுவிப்பாளராகவும் பணியாற்றியவர்)

திருகோணமலையை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டு பிரான்ஸ் பொபினி நகரை தற்போதைய வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு.அன்ரனி லோறன்ஸ் அவர்கள் 19.06.2026 வெள்ளியன்று காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - லூயிஸ் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென் றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை – அருளம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பிலோமினா லோறன்ஸ் ( முன்னாள் அகில இலங்கை தமிழரசு கட்சியின் செயற்குழு உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் அகில இலங்கை தமிழ் மகளிர் பேரவையின் உப தலைவியும், திருகோணமலை தமிழரசுக் கட்சியின் நிர்வாகக் குழு உறுப்பினரும்) அவர்களின் அன்பு கணவரும், லொறன்ரீனா (றஜனி- ஜென்னி ஜெயச்சந்திரன்), அன்ரன்ஜெறாட்(பாபு) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஜெயச்சந்திரன் மற்றும் மேரி அன்ரன் ராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், திவேனா வின் அன்புப் பேரனும் வலன்டைனின் புகுந்த வழிப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக 24.06.2026 புதன்கிழமை காலை 10.30 மணியிலிருந்து 11.30 மணி வரை funérarium des joncherolles,95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, Franceஎன்ற முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு நண்பகல் 12.30 மணிக்கு Notre Dame de Bon Secours( 25 Rue de Rome, 93000 Bobigny) தேவாலயத்தில் இறுதி அஞ்சலித் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து பூதவுடல் Cimetière Intercommunal de La Courneuve(92 avenue Waldeck Rochet 93120 La Courneuve)சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு: 0033660446508 , 0033695417229

# கல்முனையில் மிகச்சிறப்பாக நடந்த இலக்கிய செயலமர்வு!

அம்பாறை, ஜூன். 23

கல்முனை எழுத்தாளர் ஒருங்கிணைப்பு மையம் மற்றும் கல்முனை நெற் ஆகியவற்றின் ஏற்பாட்டில், இளம் மற்றும் ஆர்வமுள்ள எழுத்தாளர்களின் படைப்பாற்றலை மேம்படுத் தும் நோக்கில், கனடா உதவும் பொற்கரங்கள் அமைப்பு , கட் டார் பீனிக்ஸ் விளையாட்டு கழ கம் ஆகியவற்றின் அனுசரணை யுடன் கல்முனை வடக்கு பிர தேச செயலகத்தின் ஒத்துழைப் புடன் கவிதை மற்றும் சிறுகதை எழுத்துப் பயிற்சி பட்டறையும் செயலமர்வும் நேற்று முன் தினம் சிறப்பாக நடைபெற்றது.

கல்முனை வடக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றஇச்செயலமர்வை மட்டக்களப்பு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.கோகுலராஜன் அங்குரார்ப்ப ணம் செய்து வைத்தார்.

இலக்கியத் துறையில் அனு பவமிக்க வளவாளர்களான ஓய்வு நிலை அதிபர் அக்கரைப் பாக்கியன், ஓய்வு நிலை கோட் டக் கல்விப் பணிப்பாளர் ஜே. டேவிட், ஓய்வுநிலை மாகாண கலாச்சார பணிப்பாளர் ச.நவ நீதன் ஆகியோர் கலந்து கொண்டு, கவிதை மற்றும் சிறுகதை எழுத் தின் நுட்பங்கள், படைப்பாற் றல் வளர்ப்பு மற் றும் எழுத்து நடை தொடர்பாக எடுத்து கூறினர்.(அ)

# சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தியாலய மாணவர்களுக்கு விளையாட்டு சீருடைகள்

அம்பாறை, ஜூன். 23

சாய்ந்தமருது லீடர் அஸ்ரப் வித்தியாலயத்தின் 2026 ஆம் ஆண்டு மாகாண மட்ட விளை யாட்டுப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட மாண வர்களுக்கான புதிய விளை யாட்டு சீருடைகள் அன்ப ளிப்பாக வழங்கப்பட்டன.

பாடசாலையின் விளையாட் டுப் பிரிவினர் விடுத்திருந்த வேண் டுகோளினை ஏற்று, கல்முனை எம்.ஏ. ஸ்போர்ட்ஸ் காம்ப்ளஸ் நிறுவனத்தின் உரிமையாளர் எம்.ஏ. அஸ்கான் இவ்விளை



யாட்டு சீருடைகளை மாணவர்க ளுக்காக வழங்கினார்.மாகாண மட்டப் போட்டிகளில் பங்கேற் கவுள்ள மாண வர்களின் திறமை களை ஊக்கு விக்கும் நோக்கில் வழங்கப் பட்ட இந்த உதவி, பாடசாலை சமூகத்தினரால் பெரிதும் பாராட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பிராந்திய அமைதி...

இதன்போது தனது மகிழ்ச்சியை வெளியிட்ட அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர், அந்த ஒத்துழைப்பைத் தொடர்ச்சியாக முன்னோக்கி கொண்டு செல்வதற்கு அர்ப்பணிப்புடன் செயல்படுவதாகவும் குறிப்பிட்டார்.

மத்திய கிழக்கில் தற்போது நிலவும் சூழ்நிலை சாதகமான திசையை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பது இதன்போது கவனத்தில் கொள்ளப்பட்டதுடன், ஜுன் 19ஆம் திகதி எட்டப்பட்ட அமைதி ஒப்பந்தம் பிராந்தியத்தை நிலையான அமைதியை நோக்கி இட்டுச் செல்லும் என இரு தரப்பினரும் நம்பிக்கை தெரிவித்தனர்.

அந்த சந்தர்ப்பத்தில் இலங்கை பின்பற்றிய மனிதாபிமானக் கொள்கையை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, கடந்த மார்ச் மாதம் இலங்கை கடல் எல்லைக்கு அருகில் விபத்துக்குள்ளான இரு கப்பல்களுக்கு சட்டபூர்வமான அடிப்படையில் மனிதாபிமான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்ததாகக் குறிப்பிட்டார். அதற்காக இலங்கை எடுத்த நடவடிக்கைகளை அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் இதன்போது பாராட்டினார்.

அத்துடன், பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்காக இலங்கை தனது அதிகபட்ச ஆதரவை வழங்கும் என்றும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

இலங்கையின் ஏற்றுமதியில் தனி நாடாகப் பெரும் பங்கினை அமெரிக்கா கொண்டுள்ள நிலையில், இரு நாடுகளுக்கும் இடையில் நிலவும் வர்த்தக ஒத்துழைப்பை இரு தரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில் மேம்படுத்துவது குறித்தும், இலங்கைக்கு விதிக்கப்பட்டுள்ள தீர்வை வரிகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கையைப் போன்ற சிறிய பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு நாட்டை, அமெரிக்கா போன்ற பாரிய பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு நாட்டுடன் ஒப்பிட முடியாது என்றும், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக இடைவெளியைக் குறைப்பது கடினமான காரியம் என்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக ஒப்பந்தத்தின் பணிகளை விரைவில் நிறைவு செய்வது குறித்தும் இரு தரப்பினரதும் கவனம் செலுத்தப்பட்டது.

தொழில் அமைச்சரும், நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோருடன், இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் பதில் தூதுவர் ஜனே ஹோவெல், அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் சிரேஷ்ட பொருளாதார நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் மத்தியூ நிட்ஜ்வே, அமெரிக்க தூதரகத்தின் அரசியல் பிரிவின் தலைவர் சைலஜா கிம் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(அ)

## சர்வதேச சட்டங்களுக்கு...

அமைச்சர் இங்கு சமர்ப்பித்தார்.

இலங்கையில் பாதுகாப்பான மற்றும் முதலீட்டுக்கு உகந்த சூழல் உருவாக்கப்பட்டுள்ளதால், அமெரிக்க முதலீட்டாளர்களை இலங்கையில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அழைப்பு விடுத்த அமைச்சர், அதற்கான வசதிகளை வழங்க அரசாங்கம் ஆர்வத்துடன் செயற்பட்டு வருவதாகவும் போல் கபூரிடம் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர், இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவை தாம் பெரிதும் மதிப்பதாகக் குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பின் போது, தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள அமெரிக்க - ஈரான் ஒப்பந்தம் குறித்தும் இரு தரப்பினருக்கும் இடையில் கருத்துக்கள் பரிமாறப்பட்டதுடன், அந்த ஒப்பந்தத்தின் வெற்றிக்காக அமைச்சர் விஜித ஹேரத் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் ஜுலை 4ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள அமெரிக்காவின் 250வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, அமெரிக்காவிற்கும் அந்நாட்டு மக்களுக்கும் அமைச்சர் விஜித ஹேரத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.

(அ)

## அமெ.-ஈரான்...

ஆராயப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்காக எட்டப்பட்ட தற்காலிக உடன்படிக்கையின் தொடர்ச்சியாக இந்த பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த பேச்சுவார்த்தையில் நேரடியாகப் பங்கேற்காத அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிடம் இருந்து கடுமையான அச்சுறுத்தல்கள் வெளியாகியுள்ளன.

லெபனானில் அதிக ஊதியம் கொடுத்து இயக்கப்படும் தங்களது ஆதரவுப் படைகளின் வன்முறைகளை ஈரான் உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், தவறினால் கடந்த வாரத்தை விடவும் மிகக் கடுமையான தாக்குதல்களை ஈரான் எதிர்கொள்ள நேரிடும் என்றும் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

ட்ரம்பின் இந்த அச்சுறுத்தலுக்கு ஈரானின் தலைமைப் பேச்சுவார்த்தையாளர் மொஹமட் பாகர் காலிபாப் தனது எக்ஸ் தளத்தில் நேரடிப் பதிலடி கொடுத்துள்ளார். அமெரிக்காவின் இத்தகைய அச்சுறுத்தல்களைத் தங்களது நாடு ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை என அவர் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், இந்தப் பேச்சுவார்த்தையின் முதலாம் நாள் அமர்வில் லெபனான் விவகாரம் மற்றும் ஹோர்முஸ் நீரிணையின் பாதுகாப்பு குறித்து இருநாட்டு அதிகாரிகளும் முக்கிய ஆலோசனைகளை முன்னெடுத்தனர்.

அத்துடன், சர்வதேச அளவில் முடக்கப்பட்டுள்ள ஈரானின் நிதிச் சொத்துக்களை விடுவிப்பது மற்றும் மசகு எண்ணெய் வர்த்தகம் மீதான அமெரிக்காவின் தடைகளில் இருந்து தற்காலிக சலுகைகளைப் பெறுவது குறித்தும் இருதரப்பும் விரிவாக விவாதித்துள்ளதாக ஈரானிய தூதுக்குழு தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகள் ஒருபுறம் நடந்துகொண்டிருக்கும் போதிலும், மறுபுறம் களத்தில் மோதல்கள் தீவிரமடைந்துள்ளன.

தெற்கு லெபனானில் உள்ள போபர்ட் கோட்டை பகுதியில் இருந்து இஸ்ரேலியப் படைகள் எக்காரணம் கொண்டும் பின்வாங்காது என இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் அறிவித்துள்ளார்.

அதேவேளை, காசாவில் இஸ்ரேலியப் படைகள் நடத்திய தாக்குதலில் மேலும் ஒன்பது பேர் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(அ)

## ஜனாதிபதி செயலகம்...

இதற்கு முன்னதாக 9 நாள்கள் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின் பின்னர், ஜனாதிபதியுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் ஒன்றரை அல்லது இரண்டு மாதங்களுக்குள் இதற்கான தீர்வு பெற்றுத் தரப்படும் என உறுதியளிக்கப்பட்டதாக அச் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

மேலும், அந்த வாக்குறுதிக்கமைய நாரா நிறுவனம் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்கள் ஒன்றிணைந்து, கடந்த ஏப்ரல் 09 ஆம் திகதிக்குள் கடலடி மற்றும் கடற்கரை சார்ந்த களப் பரிசோதனைகளை முடித்திருந்த போதிலும், 5 மாதங்கள் கடந்தும் இதுவரை தீர்வுகள் வழங்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேநேரம் எதிர்வரும் புதன்கிழமைக்குள் திருப்திகரமான தீர்வு கிடைக்காவிட்டால், நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்தும் 2,000 இற்கும் அதிகமான மீனவர்களை இந்தப் போராட்டத்துக்கு அழைக்கப்போவதாகவும் அகில இலங்கை மீனவர் சங்கம் எச்சரித்துள்ளது.

(அ)

## அமைச்சர் ஆனந்த...

உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தபோதிலும், ஜனாதிபதியின் தலைமை அதிகாரியாகத் தொடர்ந்து பணியாற்றி வருவதாகவும், அரசியலமைப்பு விதிகளின்படி இப்பதவி அவரை பாராளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவதிலிருந்து தகுதி நீக்கம் செய்வதாகவும் அந்த மனு வாதிடுகிறது.

நிர்வாகப் பதவியை வகிக்கும் அதேவேளையில், விஜேபாலாவால் தனது பாராளுமன்றப் பதவியை சட்டபூர்வமாகத் தக்கவைத்துக் கொள்ள முடியுமா என்பதைத் தீர்மானிக்கவுள்ள நிலையில், இவ்வழக்கு இப்போது முழுமையான விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

(அ)

## பதவி விலகுகிறார்...

போவதாக சேர் கெய்ர் ஸ்டார்மர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

பதவி விலகல் குறித்த இந்த அதிரடி அறிவிப்பு, நாட்டின் அடுத்த பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கான உட்கட்சித் தேர்தலுக்கான வழியை தற்போது ஏற்படுத்தியுள்ளது.

பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான டவுனிங் ஸ்ட்ரீட்டில் உரையாற்றிய கெய்ர் ஸ்டார்மர், அடுத்த பொதுத் தேர்தலில் தொழிற்கட்சியை வழிநடத்துவதற்கு தான் பொருத்தமானவர் அல்லர் என்பதை ஏற்றுக்கொள்வதாகவும், பதவியிலிருந்து விலகும் தனது முடிவு குறித்து மன்னர் மூன்றாம் சாள்ஸுக்கு முறைப்படி அறிவித்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

தனக்குப் பதிலாக புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான கால அட்டவணையை வெளியிடுமாறு தொழிற்கட்சியின் ஆளும் குழுவிடம் கேட்டுக்கொண்டுள்ளதாக ஸ்டார்மர் குறிப்பிட்டார்.

புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான உட்கட்சித் தேர்தல் போட்டிகள் நிறைவடையும் வரை கெய்ர் ஸ்டார்மர் நாட்டின் பிரதமர் பதவியில் தொடர்ந்து நீடிப்பார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(அ)

## ஐ.நா. சித்திரவதை....

சந்தித்துக் கலந்துரையாடினர்.

கடந்த 2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விஜயத்திற்குப் பின்னர், சித்திரவதைகளைத் தடுப்பதில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்கள் குறித்து மதிப்பிடுவதே இந்த குழுவின் முக்கிய நோக்கமாகும்.

இந்த விஜயத்தின் முக்கிய சந்திப்பொன்று வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது. இதில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார, பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, சிறைச்சாலைகள் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் முக்கிய பங்குதாரர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பின்போது, சித்திரவதைகள் தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து ஐ.நா. குழுவினர் கேள்விகளை எழுப்பினர். இதற்குப் பதிலளித்த அமைச்சர் விஜித ஹேரத், 2024 ஆம் ஆண்டின் இறுதியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்து ஐ.நா குழுவினருக்கு விரிவாக விளக்கமளித்தார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் கூற்றுப்படி, சித்திரவதை மற்றும் ஏனைய கொடுமையான, மனிதநேயமற்ற அல்லது அவமதிப்பான நடத்துகை அல்லது தண்டனைக்கு எதிரான மாநாட்டின் விருப்பத்துக்குரிய நெறிமுறையின் 16 ஆவது பிரிவுக்கு இணங்க, இந்த உபகுழு தனது இரகசிய முதற்கட்ட அவதானிப்புகளை இலங்கை அரசாங்கத்துக்கும், தேசிய தடுப்பு பொறிமுறைக்கும் வழங்கவுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இந்த குழுவினர் தாங்கள் கண்டறிந்தவை மற்றும் பரிந்துரைகளை உள்ளடக்கிய இறுதி இரகசிய அறிக்கை ஒன்றை தயாரித்து இலங்கை அரசாங்கத்திடம் கையளிப்பர்.

இந்த மாநாட்டின் விதிகளின் படி, இலங்கை அதிகாரிகள் பகிரங்கப்படுத்துமாறு கோரினால் ஒழிய, இந்த அறிக்கை முற்றிலும் இரகசியமாகவே பேணப்படும். கடந்த 2019 ஆம் ஆண்டு இந்த குழுவினர் மேற்கொண்ட விஜயத்தின் அறிக்கை கூட இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

## பாதுகாப்பற்ற கிணற்றுக்குள்ள...

சம்பவம் தொடர்பில், அப்பகுதி மக்கள் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டபோது, குழந்தை கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டது.

சடலம், மேலதிக விசாரணைகளுக்காக, கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. தர்மபுரம் பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## 21 மாத ஆட்சியால்...

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தையும் மக்கள் இந்த அரசாங்கத்துக்கு வழங்கினர். ஆனால், இந்த 21 மாதங்களில் மக்களுக்குப் பயனுள்ள எதையும் அரசாங்கம் செய்யவில்லை. சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் தரவுகளின்படி, நாட்டில் 24.5 வீதமானோருக்கு இரண்டு வேளை உண்பதற்குக் கூட வருமானம் இல்லை. சுமார் 55 இலட்சம் மக்கள் இந்த அவலநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

திறைசேரியில் 1,100 பில்லியன் ரூபாய் மீதமாக இருந்ததாகக் கூறப்படும் கணக்கு ஒரு ஏமாற்று வேலை. மூலதனச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட 650 பில்லியன் ரூபாயை எவ்வாறு செலவிடுவது என்று தெரியாத காரணத்தினாலேயே அது தேங்கிக் கிடந்தது. ஒருபுறம் பணத்தை வீணாகத் தேங்கவிட்டு, மறுபுறம் 1,900 பில்லியன் ரூபாய் கடன் வாங்கி வட்டி செலுத்தியுள்ளனர்.

கடந்த காலங்களில் வெறுப்பையும், குரோதத்தையும் மட்டுமே விதைத்தவர்கள் இன்று சர்வதேச அரங்கில் நாட்டுக்கு அவமானத்தைத் தேடித்தருகின்றனர். பல்கலைக்கழகக் காலத்தில் பிற மாணவர்களைக் கற்கவிடாமல் தடுத்த ஒரு பயங்கரவாதக் குழுவின் பின்னணியைக் கொண்டவர்களிடம் இருந்து இதைவிட மேலான எதையும் எதிர்பார்க்க முடியாது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# இலங்கை - தமிழக கடல்வழியில் கடத்தல், ஊடுருவல் அபாயம்!

## சமூக ஆர்வலர்கள் கவலை

சென்னை, ஜூன். 23

இலங்கைக்கு மிக அருகில் உள்ள தமிழகத்தின் தனுஷ்கோடி பகுதியில் பொலிஸ் சோதனைச் சாவடிகள் கைவிடப்பட்டுள்ளதால், இரு நாடுகளுக்கும் இடையிலான கடத்தல்கள் மற்றும் சட்டவிரோத ஊடுருவல்கள் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளமை குறித்து சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இராமேஸ்வரம் தனுஷ்கோடியில் இருந்து இலங்கை தலைமன்னார் வரையான தூரம் சுமார் 38 கிலோமீற்றர் மாத்திரமாகும்.இதில் தனுஷ்கோடியில் இருந்து 11 கிலோமீற்றர் தொலைவில் உள்ள 6ஆம் மணல் திட்டையுடன் இந்திய எல்லை முடிவடைகிறது.

இந்த குறுகிய கடல் எல்லைப் பகுதி வழியாக இரு நாட்டு கடத்தல்காரர்களும் தடையின்றி ஊடுருவும் சூழல் காணப்படுவதாக எச்சரிக்கப்படுகிறது.

முன்னதாக, கடலோரப் பாதுகாப்பைப் பலப்படுத்த பாம்பன் பாலம், இராமேஸ்வரம் ஓலைக்குடா, வேர்க்கோடு மற்றும் தனுஷ்கோடி முகுந்தராயர் சத்திரம் ஆகிய பகுதிகளில் பொலிஸ் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டன.

எனினும், கடந்த ஐந்து ஆண்டு காலத்தில் போதிய பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்படாததால் இந்த கண்காணிப்புப் பணிகள் முடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது தனுஷ்கோடியில் பொலிஸார் தங்குவதற்காக அமைக்கப்பட்டிருந்த ஓய்வறை உடைந்து கிடப்பதுடன், ஒரு பொலிஸ் அதிகாரி கூட பணியில் இல்லை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதன் காரணமாக கடல் வழியிலான கடத்தல்களும் ஊடுருவல்களும் அதிகரித்துள்ளதால், தமிழகத்தில் தற்போது பதவியேற்றுள்ள அரசாங்கம் இந்த சோதனைச் சாவடிகளுக்கு உடனடியாக பொலிஸாரை நியமித்து கடலோரப் பாதுகாப்பைப் பலப்படுத்தவேண்டும் என சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ)

# துப்பாக்கி தவறுதலாக வெடித்து சிப்பாய் பலி!

## மன்னார் பாலத்தடியில் சம்பவம்

மன்னார், ஜூன். 23

மன்னார் பிரதான பாலத்தடியில் அமைந்துள்ள சோதனைச்சாவடியில், கடமையில் இருந்த இராணுவ சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி, தவறுதலாக வெடித்ததில் இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று திங்கள்கிழமை காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த இராணுவ சிப்பாய் மன்னார் சௌத்பார் இராணுவ முகாமில் கடமையாற்றியவர் (வயது-46) என தெரியவந்துள்ளது.

இந்த இராணுவ சிப்பாய் மன்னார் பிரதான பாலத்தடியில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்ததோடு, அங்கு கடமையில் உள்ள இராணுவச் சிப்பாய்களுக்கு பொறுப்பாக இருந்து, பணி நிமித்தம் துப்பாக்கிகளை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ சிப்பாய்களுக்கு துப்பாக்கிகளை பரிசோதித்து வழங்க முற்பட்டபோதே துப்பாக்கியொன்று வெடித்திருக்கிறது. இதன் காரணமாக அந்த இராணுவ சிப்பாய் காயமடைந்த நிலையில் உடனடியாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். எனினும் குறித்த இராணுவ சிப்பாய் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த இராணுவ சிப்பாயின் சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் நடத்தி வருகின்றனர். (அ)

# கொழும்பை முற்றுகையிடுவோம்!

## விவசாய ஒற்றுமை சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன். 23

நெல்லுக்கான நியாயமான உத்தரவாத விலை வழங்கப்படாவிட்டால், எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் நாடு முழுவதுமுள்ள விவசாயிகளைத் திரட்டி கொழும்பை முழுமையாக முற்றுகையிடப்போவதாக தேசிய விவசாய ஒற்றுமை சங்கத்தின் தலைவர் அநுராத தென்னக்கோன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போது அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நுகர்வோருக்குக் குறைந்த விலையில் அரிசியைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, விவசாயிகளைத் தொடர்ந்து நட்டத்தில் இயங்க வைக்க முடியாது. தற்போதைய அமைச்சர்களின் செயல்பாடுகள் நாட்டின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தேசியப் பாதுகாப்பைப் பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளது. இந்த நிலை நீடித்தால் விவசாயிகள் நெல் விவசாயத்தை முற்றிலுமாகக் கைவிடும் அபாயம் உள்ளது.

தற்போது பிரதேச மட்டங்களில் சிறிய அளவிலான போராட்டங்கள் மட்டுமே தங்களால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாத அறுவடையின்போது விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு அரசு செவிசாய்க்காவிட்டால், கொழும்பின் முக்கிய இடங்கள் அனைத்தும் முற்றுகையிடப்பட்டு போராட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

தாங்கள் ஆட்சிக்கு வர விவசாயிகளைப் பயன்படுத்தியவர்கள் இன்று விவசாயிகளின் போராட்டத்துக்கு அரசியல் லேபிள் ஒட்ட முயலக்கூடாது. ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்கள் அனைவரும் விவசாயப் பின்னணியைக் கொண்ட மண்ணில் இருந்து வந்தவர்கள் என்பதால், விவசாயிகளின் பிரச்னைகளை மனிதாபிமானத்துடன் அணுக வேண்டும். இல்லையெனில் இந்த திறமையற்ற அரசாங்கத்துக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் - என்றார். (அ)

# இலங்கைப் பல்லுயிர்த்தன்மைக்கு காலநிலை மாற்றத்தால் சவால்கள்

கொழும்பு, ஜூன். 23

எல்நினோ மற்றும் லாநினா ஆகிய காலநிலை மாற்றங்கள் காரணமாக, இலங்கையின் கடல் மற்றும் நீர்நில வாழ் உயிரினங்களின் பல்லுயிர்த்தன்மையைப் பாதுகாப்பதில் ஏற்பட்டுள்ள சவால்கள் குறித்து இலங்கையின் காலநிலைக்கான பாராளுமன்ற ஒன்றியம் தனது கவலையை வெளியிட்டுள்ளது.

பாராளுமன்ற வளாகத்தில் அண்மையில் நடைபெற்ற விசேட குழுக்கூட்டத்தின்போதே இந்த விடயம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இந்த கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் எல்.எம். அபேவிக்ரம ஆகியோரின் இணைத் தலைமையின் கீழ் நடைபெற்றது.

மாறிவரும் காலநிலை நிலைமைகளுக்கு மத்தியில், நாட்டின் சுற்றுச்சூழல் அமைப்புகளின் பாதுகாப்பை எவ்வாறு பலப்படுத்துவது என்பது குறித்து இதன்போது விரிவாகக் கவனம் செலுத்தப்பட்டது.

உலகளாவிய காலநிலை மாற்றங்களால் இலங்கையின் அரிய வகை நீர்,நில வாழ் உயிரினங்கள் மற்றும் கடல்சார் உயிர்த்தொகுதிகள் எதிர்கொள்ளும் சுற்றுச்சூழல் சவால்களைக் கட்டுப்படுத்துவதற்கும், அதற்கான கொள்கை ரீதியான தீர்வுகளை நடைமுறைப்படுத்துவது குறித்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் இதன்போது கலந்துரையாடினர். (அ)

# சிறுபோக நெல் அறுவடை ஆரம்பம் உரிய விலை கிடைக்காது ஏமாற்றம்!

## கவலை வெளியிடும் விவசாயிகள்

கொழும்பு, ஜூன். 23

நாட்டின் சில பகுதிகளில் சிறுபோக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், கடந்த பெரும்போக நெல் அறுவடைக்கு இதுவரை முறையான விலை கிடைக்கவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், தற்போது சந்தையில் ஒரு கிலோகிராம் நெல்லின் விலை 120 ரூபாவாகக் காணப்படுவதாக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

எப்பாவல பகுதியில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அமைச்சர், எதிர்காலத்தில் வறட்சி நிலை ஏற்பட்டாலும் நாட்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்படாது என்றும் குறிப்பிட்டார்.

அமைச்சரின் இந்த அறிவிப்புக்கு மத்தியில், இரத்தினபுரி - கொடகவெல, ரன்வல பகுதி விவசாயிகள், இந்த முறை சிறுபோக நெற் பயிர்ச்செய்கையை ஆரம்பித்து ஒன்றரை மாதங்களுக்கும் மேலாகியும், பயிர்களுக்குத் தேவையான உரங்களை இதுவரை முறையாகப் பெற்றுக்கொள்ள முடியாமல் தவிப்பதாகக் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அத்துடன், நெல் அறுவடைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளபோதிலும், அதற்கான முறையான விலை இதுவரை தீர்மானிக்கப்படவில்லை எனவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (அ)

# 15,000 நாய்களுக்கு வடக்கில் கருத்தடை

யாழ்ப்பாணம், ஜூன். 23

வடக்கில் ஆண் மற்றும் பெண் நாய்களுக்கு கருத்தடைச் சிகிச்சையை இந்த ஆண்டும் தொட ரவுள்ளதாக வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.வசீகரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த வருடம் சுமார் 15,000 நாய்களுக்குச் சிகிச்சை அளிக்கக்கூடிய மருந்துகள் கைவசம் தயாராகவுள்ள நிலையில், இம்முறை பெண் நாய்களுடன் சேர்த்து ஆண் நாய்களுக்கும் சமாந் தரமாகக் கருத்தடைச் சிகிச்சையை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேவேளை, மாகாண சுகாதாரத் திணைக்களமும் தனியானதொரு கருத்தடைத் திட்டத்தை முன்னெடுப்பதால், இரு திணைக்களங்களும் ஒருங்கிணைந்து பிரதேசங்களைப் பகிர்ந்தளித்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளது.

இத்திட்டத்தை முன்னெடுக்கும்போது கடந்த ஆண்டு சில இடங்களில் பொதுமக்களின் எதிர் ப்பு எழுந்தமையால், சட்ட ரீதியான ஏற்பாடுகள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்பின் அவசியம் குறித்து போதிய விழிப்புணர்வை ஏற்படுத்திய பின்னரே அடுத்த மாதம் முதல் இத்திட்டத்தை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், நாய்களைப் பிடிப்பவர்கள் உள்ளிட்ட இத்திட்டத்துடன் தொடர்புடைய பணியா ளர்களுக்கான தடுப்பூசிகளை வழங்கவும் நடவடி க்கைகள் எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (அ)

# கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் சட்டவிரோத மணல் கடத்தல் முறியடிப்பு

கிளிநொச்சி, ஜூன். 23

கிளிநொச்சி, உமையாள்புரம் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சட்டவிரோத மணல் கடத்தல் தொடர்பில் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மணல் கடத்தலில் ஈடுபட்டவரை, விசேட அதிரடிப்படையினர் கைது செய்தபோது, அங்கிருந்தவர்கள், பாதுகாப்பு தரப்பினர் மீது தாக்குதல் மேற்கொண்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதன்போது அங்கு முறுகல் நிலை ஏற்பட்டதுடன், பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் 14 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட 14 சந்தேக நபர்களும் கிளிநொச்சி நீதிவான் முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டதை அடுத்து, அவர்களை இ விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து கிளிநொச்சி பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.